அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 303

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
16 ஆகஸ்ட், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

உள்நாட்டு முழுச்சம்பளப் படிப்பு லீவு
சம்பந்தமான கடப்பாட்டுச் சேவைக்
காலத்தை மீளவாய்தல்

28-02-1975 ஆம் தேதிய 178-ஆம் இலக்கத் தாபனச் சுற்றறிக்கையில் கீழ் வழங்கப்பட்ட உள்நாட்டு முழுச்சம்பளப் படிப்பு லீவு சம்பந்தமான கடப்பாட்டுச் சேவைக் காலம் இத்தால் திருத்தப்படுகிறது. அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் படிப்புக்காக அல்லது பயிற்சிக்காகப் பெற்றுக் கொள்ளும் முழுச் சம்பளப் படிப்பு லீவு சம்பந்தமாக கடப்பாட்டுச் சேவைக்காலப் பகுதியொன்றில் சேவை புரிவதென கீழ்க்காணுமாறு ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.

(1) தற்பொழுது உள்ளவாறு ஒரு மாதத்துக்கு அல்லது அதற்குக் குறைந்த காலத்துக்குக் கடப்பாட்டுச் சேவைக் காலம் கிடையாது

(11) ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலமானால் கடப்பாட்டுச் சேவைக் காலமானது குறைந்தது ஆறு மாதங்களுக்கும் ஆகக் கூடியது ஐந்து வருடங்களுக்கும் உட்பட்டதாக லீவுக்காலத்தைப் போன்று இரு மடங்காக அமைதல் வேண்டும்.

(111) கடப்பாட்டுச் சேவைக்காலமானது கிட்டிய முழு மாதத்துக்குக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

02. மேற்குறித்த கடப்பாட்டுச் சேவைக் காலங்கள் ஏலவே உத்தியோகத்தர்கள் இணங்கியுள்ள முறிகளுக்கும்/உடன்படிக்கைகளுக்கும் பொருந்தும்.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.